19th March 1959]

Marandai channel, Tenkasi taluk

* 821 *Q.*—SRI T. VELUCHAMI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) நெல்லை ஜில்லா தென்காசித் தாலூகாவில் மாருந்தைக் கால்வாயை மராமத்து செய்ய உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் என்றால், எப்போது மராமத்து மேற்கொள்ளப்படும் ?

(இ) அதற்கு உத்தேச மதிப்பு எவ்வளவு ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) In 1959–60.

(*c*) Rs. 80,000.

SRI T. VELUCHAMI : சென்ற பருவ மழையின் போது இந்தக் கால்வாய் மராமத்து செய்யப்படாத காரணத்தால் பாதிக்கப்பட்டு மாருந்தைக் குளம் பெருகவில்லை. ஆதலால், இந்த வருஷ பருவ மழை காலத்திற்குள்—அக்டோபர் - நவம்பர் மாதத்திற்குள் இந்தக் கால்வாயை மராமத்து செய்யும் காரியத்தைத் துரிதப்படுத்த தயவு செய்து மந்திரியவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : 1959–60க்குள் நிச்சயமாக ரிப்பேர் செய்யப்படும்.

SRI M. K. SOMASUNDARAM : 1959–60க்குள் மராமத்து செய்யப்படும் என்று மந்திரியவர்கள் சொன்னார்கள். இப்பொழுது பயிர் செய்ய தடையாக இருக்கிறது. இதற்காக எவ்வளவு கூடிய சீக்கிரம் நடவடிக்கை எடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் நடவடிக்கை எடுத்து அதை மராமத்து செய்ய முன் வருவார்களா?

THE HON. SRI P. KAKKAN : கவனிக்கிறேன்.

Welfare of Scheduled Tribes

* 822 *Q.*—SRI S. LAZAR (on behalf of SRI P. G. MANICKAM): கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா :—

(அ) கோயம்புத்தூர் ஜில்லாவிலிருக்கும் மலை ஜாதியார்களில் (Scheduled Tribes) நலவுரிமைக்காகச் செலவிடப்படுவதற்காக 1958–59-ம் வருஷத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு ?

(ஆ) எந்தெந்த தாலூகாவிலே எந்தெந்த இடங்களிலே என்னென்ன காரியங்கள் செய்யப்பட எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Rs. 1,50,711.

(*b*) A statement [a] is placed on the table of the House.

Nomadic tribes

* 823 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether any survey or study about nomadic people was conducted recently in the State;

---

[a] Printed as Appendix I on page 87 *infra*.